பக்கங்கள் - 10

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

மின்னிதழ்

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 27 ஞாயிற்றுக்கிழமை (10.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 143

மதுபானசாலைகள்

## தொடர்ந்து மூடப்பட்டிருக்கும்

(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதன் பின்னர் மதுபான விற்பனை நிலையங்கள் திறக்கப்படாதென தெரி

02



இரண்டு மாதங்களின் பின் வழமைக்கு திரும்பும் யாழ்ப்பாணம்

## சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அன்றாட செயற்பாட்டை முன்னெடுக்குக

### பொதுமக்களிடம் அரச அதிபர் க.மகேசன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாளை திங்கட்கிழமையிலிருந்து யாழ்ப்பாணம் வழமைக்குத் திரும்பும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண நகரை வழமையான செயற்பாட்டுக்கு உட்படுத்துவது தொடர்பான விசேட கூட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன் பின்னர் ஊட

02

ஒவ்வொரு தனிநபர்களின் சுயஒழுக்கம் மிகவும் அவசியமானது

# கொரோனாவை கட்டுப்படுத்துவது மக்களின் கையிலேயே உள்ளது

### சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் பபா பலிஹவடன தெரிவிப்பு



**(கொழும்பு) கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் பொறுப்பு மக்களின் கைகளிலேயே உள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் நிபுணத்துவ மருத்துவர் பபா பலிஹவடன தெரிவித்துள்ளார். வைரஸை கட்டுப்படுத்த ஒவ்வொரு தனிநபர்களின் சுயஒழுக்கம் மிகவும் அவசியம் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.**

அவர் வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாளை திங்கட்கிழமை நாடு திறக்கப்படுகின்றது என்ற காரணத்திற்காக அனைவரும் கடைகளுக்கு செல்வதனையோ, வீதியில் திரிவதனையோ தவிர்த்து கொள்ள வேண்டும்.

கொரோனா வைரஸ்

02

## திங்கள் முதல் பல்கலையும் திறக்கப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்

02

## 847

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 12 பேர் நேற்று சனிக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு

02

## முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடு புத்தரின் போதனைக்கு எதிரானது

### ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

நாட்டில் முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராகப் பரவலாக அரங்கேற்றப்படுகின்ற இனவாத செயற்பாடுகள் மிகவும் அருவருக்கத்தக்கவை என்பதுடன், கௌதம புத்தரின் உன்னத போதனைகளுக்கும் முரணானவை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ சாடியிருக்கிறார்.

இதுகுறித்து அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது,

எமது சமூகத்தில் தொடக்க

பொதுமக்களுக்கு பாதுகாப்பான சூழலை

## உருவாக்கிக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமை

### சபாநாயகர் கரு ஜயசூரிய

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் தோற்றம் பெறக்கூடிய புதிய வாய்ப்புக்கள் அனைத்தையும் உயர்மட்டத்தில் பயன்படுத்திக் கொள்வதுடன், அதற

02

மாகாணத்துக்குள்ளான

## போக்குவரத்துக்கு பாஸ் தேவையில்லை

### அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

நாளை திங்கட்கிழமை ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின் மாகாணத்துக்குள்ளான போக்குவரத்துக்கு பாஸ் அனுமதி

02

முள்ளிவாய்க்காலில் பொலிஸார் அடாவடி

## பொதுமக்கள் மூவர் மீது மூர்க்கத்தனமான தாக்குதல்

### முறைப்பாடு ஏற்கவும் மறுப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளி

02

## வயோதிபப் பெண் மீது இராணுவம் தாக்குதல்

### வீட்டு உடைமைகளையும் சேதப்படுத்தினர்

### வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலில் சம்பவம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் உள்ள வீடொன்றை

02

## தேர்தலைவிட மக்களின் பாதுகாப்பு முக்கியமானது

### ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவியுள்ள பின்னணியில் பொதுத் தேர்தலைவிட பொதுமக்களின் பாதுகாப்பே முக்கியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் அமைச்சரு

02

நிதியைப் பயன்படுத்த ஜனாதிபதிக்கோ, அமைச்சரவைக்கோ

## அதிகாரம் இல்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்தால் சிறை செல்லத் தயார்!

### அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

அரச செலவுகளை மேற்கொள்ளவும் நிதியைப் பயன்படுத்தவும் ஜனாதிபதிக்கோ அல்லது அமைச்சரவைக்கோ அதிகாரம் இல்லை என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்குமாயின்,

02

## தொடர்ந்து...

விக்கப்பட்டுள்ளது.

தீவிரமாக பரவி வரும் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த மதுபான சாலைகள் அனைத்தும் மூடப்பட்ட நிலையில் உள்ளன.

நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்ற மற்றும் தளர்த்தப்படும் சந்தர்ப்பங்களில் எக்காரணம் கொண்டும் மதுபான சாலைகளை திறக்க அனுமதிக்க முடியாது எனவும், சட்டவிரோதமான மது உற்பத்திகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மதுவரித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் கபில குமாரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் மேல் மாகாணம் மற்றும் புத்தளம் மாவட்டம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதன் பின்னர் மதுபான விற்பனை நிலையங்கள் திறக்கப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## திங்கள் முதல்...

களின் அலுவலங்களின் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களை மாத்திரம் அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பல்கலைக் கழங்களின் அலுவலகங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் ஆணைக்குழு கூறியுள்ளது.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே எதிர்வரும் 11ஆம் திகதி அரச பாடசாலைகளை திறப்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைகளுக்கு அமைய பாடசாலைகளை திறப்பது தொடர்பாக அறிவிக்கப்படும் எனவும் கல்வியமைச்சு கூறியுள்ளது. (ம-3)

## சுகாதார நடை...

கங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அரசாங்க அதிபர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

"கடந்த இரண்டு மாதங்களின் பின்னர் எதிர்வரும் திங்கட் கிழமையிலிருந்து யாழ். மாவட்டம் மீண்டும் வழமைக்குத் திரும்பவுள்ளது. அனைத்து செயற்பாடுகளும் வழமை போன்று இடம் பெறும்.

எனினும், சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலுக்கு அமைய பொதுப் போக்குவரத்து, வர்த்தகர்கள், சிகை அலங்கரிப்பாளர்கள், உணவக உரிமையாளர்கள் சுகாதார நடைமுறையை பின்பற்றி பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வண்ணம் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

யாழ்.மாவட்டமானது வழமைக்குத் திரும்புகின்ற போதிலும் கொரோனா தொற்று அபாயம் இன்னும் நீங்கி விடவில்லை.

எனவே மக்கள் இவ்விடயத்தில் அவதானமாகச் செயற்பட்டு அநாவசியமாக வீடுகளிலிருந்து வெளியே வரவேண்டாம் என்பதோடு, மக்கள் தமது தேவைகளை முடித்துக் கொண்ட பின்னர் வீடுகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முன்வர வேண்டும்" என அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-3)

## பொதுமக்கள்...

வாய்க்கால் கிழக்கு மற்றும் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியை சேர்ந்த 3 நபர்கள் மீது முல்லைத்தீவு பொலிஸ் நிலைய அதிகாரிகள் மூர்க்கத்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

குறித்த நபர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சம்பவம் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்ய முல்லைத்தீவு பொலிஸார் மறுத்துள்ளனர்

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

கடந்த ஆறாம் திகதி இரவு 10 மணிக்கு பின்னதாக முள்ளிவாய்க்கால் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிக்கு சென்ற பொலிஸ் அதிகாரிகள் சிலர் ஒரு நபருடைய பெயரைக் கேட்டு அவர் எங்கே என்றும்? அவரைக் கொண்டு வந்து உடனடியாக ஒப்படைக்குமாறும் கோரி மூன்று நபர்கள் மீதும் மூர்க்கத்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர்

குறித்த பொலிஸ் அதிகாரிகள் முதலில் ஒரு நபர் மீது தாக்குதலை நடத்திவிட்டு பின்னர் இன்னும் ஒரு வீட்டிற்கு சென்று மற்றைய நபர் மீதும் தாக்குதல் நடத்தி பின்னர் இன்னும் ஒரு வீட்டுக்கு சென்று மூன்றாவது நபர் மீதும் மூர்க்கத் தனமான தாக்குதலை நடத்தி அவர்கள் பெயர் குறிப்பிட்ட ஒரு நபரை உடனடியாக ஒப்படைக்குமாறு கோரி கண் மூடித்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளனர்

குறித்த தாக்குதலில் காயமடைந்த நபர்கள் 1990 நோயாளர் காவு வண்டி மூலமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒரு நபர் 7ஆம் திகதி வீட்டில் மனைவி. பிள்ளைகள் தனியாக இருக்கின்ற நிலையில் வைத்தியசாலையில் இருந்து வீட்டிற்கு சென்றுள்ள நிலையில் மற்றைய நபர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த போதும் வைத்தியசாலை நிர்வாகம் அவரை வீட்டுக்கு செல்லுமாறு அனுப்பியுள்ளன.

வைத்தியசாலையில் பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யுமாறு கோரிய போது பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யவில்லை எனவும் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு தன்னுடைய உடல்நிலை தேறவில்லை நான் தொடர்ந்தும் சிகிச்சை பெற வேண்டும் என்று கோரிய போதும் பொலிஸாரின் தூண்டுதலில் வைத்தியசாலை நிர்வாகம் அவரை வீட்டிற்கு அனுப்பியதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தொடர்ந்து வைத்தியசாலையில் இருந்து நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் சென்று முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யுமாறு கோரிய போதும் இரவு 8 மணி வரை பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யாமல் நீதிமன்றம் சென்று என்ன பெற்றுக் கொள்ளப் போகிறீர்களோ அதனை தாங்கள் தருவதாகவும் பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்ய வேண்டாம் எனவும் பொலிஸார் கோரியதாக பாதிக்கப்பட்ட நபர் குற்றம் சுமத்தியுள்ளார்.

என்ன காரணம் என்று இல்லாது இரவு நேரம் வீடுகளுக்குள் புகுந்து இவ்வாறான தாக்குதல் நடத்துவதன் பின்னணியில் குறித்த பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். அத்தோடு குறித்த நபர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறித்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-3,281)

## உருவாக்கிக்...

கேற்ற பாதுகாப்பான சூழலை உருவாக்குவது அரசாங்கத்தின் கடமையாகும் என்றும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இதுகுறித்து, அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது,

தற்போது எமது நாட்டுமக்கள் கோவிட் - 19 கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது குறித்து அறிவூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தகையதொரு சூழ்நிலையில் தோற்றம் பெறக்கூடிய புதிய வாய்ப்புக்கள் அனைத்தையும் உயர்மட்டத்தில் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

தலைவர்கள், முயற்சியாளர்கள், இளைஞர், யுவதிகள் உள்ளிட்டோரின் பங்களிப்பை உச்சமட்டத்தில் பெற்றுக்கொள்ளும் அதேவேளை, அதற்கேற்றவாறான பாதுகாப்பான சூழலை உருவாக்கிக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தேர்தலைவிட...

மான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டில் உள்ள மிகவும் பழமையான கட்சி. ஐக்கிய தேசியக் கட்சி எந்த நேரத்திலும் தேர்தலுக்கு தயார். எப்படியான சவால்கள் வந்தாலும் கட்சி இம்முறை 22 மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் கூற முடியும்.

எனினும் தற்போது தேர்தலை விட மிகப் பெரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. முதலில் அதில் இருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும்.

தேர்தலை அடிப்படையாகக் கொண்டு மக்களை பலி கொடுக்க முடியாது. தேர்தல் அவசியம் என்ற போதிலும் மக்களை பாதுகாப்பது அதனைவிட முக்கியமானது. இதில் உள்ள உண்மை நிலைமை என்ன என்பதை தெளிவுப்படுத்த வேண்டும் எனவும் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## முஸ்லிம்களுக்கு...

நிலையிலுள்ள இனவாதமானது எமது தாய் நாட்டின் மக்கள் மத்தியில் இன, மத, சமூகப் பிரிவினைகளை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. இது எமது தேசிய நலனுக்கு எதிரானதும் அதற்குக் குந்தகம் விளைவிப்பதும் ஆகும்.

மனிதத் தன்மைக்கும் உயர் மனித விழுமியங்களுக்கும் கூட அது எதிரானது. எமது முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராகப் பரவலாக அரங்கேற்றப்படுகின்ற இனவாத செயற்பாடுகள் அருவருக்கத்தக்கவை. நம் அனைவராலும் எதிர்க்கப்பட வேண்டியவை.

இத்தகைய வெறுக்கத்தக்க செயற்பாடுகள் கௌதம புத்தரின் உன்னத போதனைகளுக்கும் முரணானவையாகும். ஆசீர்வதிக்கப்பட்ட அந்தப் போதனைகளுக்குத் தவறான அர்த்தம் கற்பிப்பதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சியும் அவற்றுக்கு எதிரான குற்றமாகவும் தேசத்துரோகமாகவுமே அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## அதிகாரம்...

அந்தக் குற்றத்தை ஏற்றுக் கொண்டு சிறை செல்லவும் தாங்கள் தயார் என்று, அமைச்சரவையின் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அரச செலவுகளைச் செய்வதற்கு, அரசமைப்பில் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், பாராளுமன்றத் தேர்தலை நடத்தி, புதிய பாராளுமன்றம் கூடுவது முதலான மூன்று மாதங்கள் வரையில், அந்த அதிகாரம் ஜனாதிபதிக்குக் காணப்படுகிறது.

அதை ஏற்றுக்கொள்ளாத எவரும், உயர் நீதிமன்றத்துக்குச் சென்று, ஜனாதிபதிக்குள்ள அந்த அதிகாரத்தைச் சவாலுக்கு உட்படுத்த முடியும்.

அரச செலவுகளை மேற்கொள்வதற்கு, ஜனாதிபதிக்கோ அல்லது அமைச்சரவைக்கோ அதிகாரம் இல்லை என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்குமாயின், அந்தக் குற்றத்தை ஏற்றுக்கொண்டு சிறை செல்லவும் நாங்கள் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## வயோதிபப் பெண்...

இராணுவத்தினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியதுடன் வீட்டில் இருந்த வயோதிபப் பெண் மீதும் தாக்குதல் நடத்தியதோடு வீட்டு உடைமைகளையும் சேதப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பின்னிரவு இடம்பெற்றுள்ளது.

இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்கான வயோதிபத் தாய் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்தோடு வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டையும் அடித்து நொறுக்கி சேதப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை, இராணுவத்தினர் தாக்குதல் நடத்திவிட்டு செல்லும் போது, தமது இரண்டு அலைபேசிகளையும் இராணுவ தொப்பி ஒன்றினையும் தவறவிட்டு சென்றுள்ளதாகவும் வீட்டார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி தைப் பொங்கல் நாளன்று இராணுவச் சிப்பாய் ஒருவர் பொதுமகனால் தாக்கப்பட்டார்.

அச்சம்பவத்தின் பிரதான சந்தேகநபரை தேடியே இராணுவத்தினர் சுற்றி வளைப்பில் ஈடுபட்டனர்.

அதன் போதும் அந்நபர் கைது செய்யப்படவில்லை. சுமார் நான்கு மாத காலப்பகுதியாக அவரை கைது செய்ய இராணுவத்தினர் பல வழிகளில் முயற்சித்தும் அந்நபரை இராணுவத்தினரால் கைது செய்ய முடியவில்லை.

இந்நிலையிலேயே அவரது வீட்டிற்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு புகுந்த இராணுவத்தினர் அட்டகாசம் புரிந்துள்ளனர். (ம-3,101,114)

## கொரோனாவை...

தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. எனினும் இதனை முழு அளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பொறுப்பு மக்களின் கைகளிலேயே உள்ளது.

மக்களின் சுய ஒழுக்கம் மிகவும் அவசியமானது, மக்கள் எல்லா நேரங்களிலும் அவதானத்துடன் ஒழுக்கமாக செயற்பட வேண்டியது அவசியமானது.

தங்களை பற்றி மட்டும் சிந்திக்காது அனைத்து மக்கள் பற்றியும் கவனம் செலுத்த வேண்டிய தார்மீக பொறுப்பு மக்களைச் சாரும்.

நோய்த்தொற்று பரவிய கொத்தணிகள் கண்டறியப்பட்டுள்ளது, கடந்த சில வாரங்களில் இவ்வாறான கொத்தணிகள் எதுவும் பதிவாகவில்லை.

நாட்டை திறக்கும் போது சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனை வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்ற வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும் என மருத்துவர் பபா பலிஹவடன தெரிவித்துள்ளார். (ம-3)

## 847...

அறிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 847ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

இதுவரை 260 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

578 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## போக்குவரத்...

தேவையில்லை என யாழ்.மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின் சுகாதார நடைமுறையுடன் கட்டுப்பாட்டுடன் போக்குவரத்து சேவைகள் இடம்பெறுவதோடு, மாகாணத்துக்கு வெளியே செல்ல வேண்டுமாயின் பாஸ் அனுமதி பெற வேண்டும் என்றும் சுட்டிக் காட்டினார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

### யாழில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த

# வெளிமாவட்டத்தினைச் சேர்ந்த 298 பேர் நேற்று விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். தென்மராட்சி விடத்தற்பளையிலுள்ள 522 ஆவது படையணியின் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 298 பேர் அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்ல நேற்றுச் சனிக்கிழமை அனுமதிக்கப்பட்டனர்.

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் வாழைத்தோட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 188 ஆண்களும், 110 பெண்களும் மேற்படி தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி நபர்கள் 17 நாட்கள் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கொரோனாத் தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்டுச் சான்றிதழ்கள் நேற்றைய தினம் வழங்கப்பட்டது. குறித்த நிகழ்வில் யாழ். மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவும் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை அவர்கள் அனைவரும் சொந்த ஊர்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதற்கென இராணுவத்தினரால் விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3,18,101,114)

### பொதுத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாட

# சிறு கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)
எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டணியாக இணைந்து போட்டியிடும் சிறு கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

அந்தவகையில் நாளை மறுதினம் பிற்பகல் 2.30க்கு இந்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கான ஏது நிலைமைகள் குறித்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி இருந்தனர்.

இந்நிலையில் சிறு கட்சிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் பின்னர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் வழங்கப்படவுள்ளது.

கடந்த வாரத்தில் விருப்பு இலக்கங்கள் வழங்கப்பட இருந்த நிலையில் நாட்டு நிலைமையை கருத்தில் கொண்டு அவற்றை வழங்காதிருக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்திருந்தது.

இவ்வாறு விருப்பு இலக்கங்கள் வழங்கப்பட்டவுடன் தேர்தல் பிரச்சார பணிகள் ஆரம்பிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# பொதுத் தேர்தலுக்கு எதிராக மேலும் இரு மனுக்கள் தாக்கல்

(கொழும்பு)
பாராளுமன்றம் கலைப்பு மற்றும் ஜுன் 20 ஆம் திகதி பாராளுமன்ற தேர்தலை நடத்துவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம மற்றும் பாட்டலி சம்பிக ரணவக்க ஆகியோர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

ஜுன் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலை மறுபரிசீலனை செய்வதற்கான தேசிய தேர்தல் ஆணையத்தின் முடிவுக்கு எதிராக ஏற்கனவே 11 தரப்புகள் இவ்வாறு மனுக்களை தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்து அடுத்த வாரம் தீர்மானிக்கப்படும்

## கல்வி அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



(கொழும்பு)
பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்து அடுத்த வாரம் தீர்மானிக்கப்படும் என கல்வி அமைச்சர் டலஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு கட்டங்களாக பாடசாலைகளை திறப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

சிறுவர், சிறுமியருக்கான பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் தற்போதைக்கு ஆரம்பிக்கப்படாது எனவும், அனைத்து பாடசாலைகளையும் கிருமித் தொற்று நீக்குவதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிருமித் தொற்று நீக்கியதன் பின்னர் நான்கு நாட்கள் பாடசாலைகளை மூடி வைத்திருக்க வேண்டும் எனவும் பாடசாலை நேர அட்டவணையில் மாற்றங்கள் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சாதாரண தர மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ஏனைய மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

# ஊரடங்குச் சட்டத்தை மீறிய 50 ஆயிரம் பேர் கைது

## 12 ஆயிரத்து 975 வாகனங்கள் கைப்பற்றல்

(கொழும்பு)
நாட்டில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய ஐம்பதாயிரம் பேர் இது வரையில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவுகையை தடுக்கும் நோக்கில் கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி முதல் அரசாங்கம் நாட்டில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி வருகின்றது.

இந்த ஊரடங்குச் சட்ட காலத்தில் சட்டத்தை மீறி செயற்பட்ட சுமார் ஐம்பதாயிரம் பேரை பொலிஸார் இதுவரையில் கைது செய்துள்ளனர்.

நேற்றுக் காலை 6.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையில் மட்டும் சுமார் 255 பேர் ஊரடங்குச் சட்டத்தை மீறியமைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரையில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் பேரில் மொத்தமாக 12.975 வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

### அராலிப் பகுதியில்

# மோட்டர் திருடியவர் அகப்பட்டார்

(அராலி)
சில தினங்களுக்கு முன் அராலி தெற்கு கரைப்பிட்டி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள வீட்டில் இருந்த மோட்டர் ஒன்று களவாடப்பட்டது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து அராலி மத்தி பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது.

மோட்டர் திருடப்பட்ட வீட்டு உரிமையாளர் வேறொரு இடத்தில் வசிக்கிறார். வீட்டினை பார்வையிடுவதற்கு அவ்வப்போது வருவார். அப்படி வரும்போதே மோட்டர் திருடப்பட்டது அவருக்கு தெரியவந்துள்ளது. இதனையடுத்தே பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த மோட்டரானது விற்பனைக்காக வேறு ஒருவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்த போதே பிடிபட்டது. விற்பனைக்காக மோட்டர் வைத்திருந்தவரை கைது செய்வதற்கு வட்டுக்கோட்டை பொலிஸார் வலை வீசி வருகின்றனர். (ம-3,104)

# தேர்தலுக்கு செலவிடும் பணத்தை அரச ஊழியர்களுக்கு வழங்கவும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வேண்டுகோள்

(கொழும்பு)
நாட்டின் தற்போதைய அரசாங்கத்தை பதவிக்கு கொண்டு வர அரச ஊழியர்களில் பெரும்பான்மையானவர்கள் மிகப் பெரிய அர்ப்பணிப்பை செய்துள்ளதாகவும் அவர்களின் சம்பளத்தை குறைக்காது வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை எனவும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மீது அரச ஊழியர்கள் வைத்துள்ள நம்பிக்கையை சிதைக்க வேண்டாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

எப்படியான சூழ்நிலையிலும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணங்களை விட அதிகமான நிவாரணங்களை வழங்க தான் எதிர்பார்த்திருந்ததாகவும் அந்த சந்தர்ப்பம் தனக்கு கிடைக்காது போனதாகவும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மிகவும் சீரற்ற சுகாதார நிலைமையில் அவசரமாக தேர்தல் ஒன்றை நடத்தாது, அதற்கு செலவாகும் பணத்தை அரச ஊழியர்களின் சம்பளத்தை வழங்க பயன்படுத்துமாறும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

# 126 பப்பாசி மரங்களை வெட்டி அழித்த விசமிகள்

### முல்லைத்தீவில் அட்டூழியம்

(கொடிகாமம்)
முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் விவசாயி ஒருவரின் பப்பாசி மரங்கள் மற்றும் தோட்டத்தின் பயிர்களை வாளால் வெட்டி அழித்த சம்பவம் ஒன்று நேற்று முன் தினம் பதிவாகியுள்ளது.

உடுப்புக்குளம் பகுதியில் விவசாயி ஒருவர் சூரிய மின்கலத்தினை பயன்படுத்தி விவசாயம் மற்றும் பப்பாசி செய்கையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு சில விசமிகள் தோட்டத்திற்குள் புகுந்து பப்பாசி பழ மரங்களை அடியோடு வெட்டிச் சாய்த்துள்ளார்கள். (ம-3,114)

### காணாமல் ஆக்கப்பட்ட

# மகனைத் தேடிய தந்தை நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
வலிந்து காணாமலாக்கப்பட்ட தனது மகனைத் தேடி அலைந்த செல்லையா குமார் என்கின்ற தந்தை மரணமடைந்துள்ளார்.

காலேக்கர் திட்டம், குமாரபுரம், பரந்தனை சேர்ந்த செல்லையா குமார் என்கின்ற தந்தை 06.03.2009 அன்று வலிந்து காணாமலாக்கப்பட்ட தனது மகனான குமார் நவிசன் என்பவரை தேடி அலைந்ததுடன், கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் அமைப்புடன் இணைந்து போராட்டங்களில் கலந்து கொண்டு தனது மகனின் விடுதலையை வலியுறுத்தி வந்த நிலையில் நேற்றைய தினம் மரணமடைந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் அமைப்பின் தலைவி தெரிவித் துள்ளார். (ம-3,9)



# பாராளுமன்ற பொதுத் தேர்தல்

# 3 அல்லது 4 வாரங்கள் தள்ளிப்போகும் சாத்தியம்

(கொழும்பு)

**பொதுத் தேர்தல் ஏற்கெனவே ஒத்திவைக்கப்பட்ட நிலையில் ஜூன் மாதம் 20ஆம் திகதிக்கு நாள் குறிக்கப்பட்டுள்ளபோதிலும் அன்று முதல் 3 அல்லது 4 வாரங்களுக்கு ஒத்திவைக்கப்படும் சாத்தியங்கள் காணப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**

அந்த வகையில், ஜூலை 4ஆம் திகதியன்றே தேர்தலை நடத்துவதற்கான மிக நெருங்கிய காலப்பகுதியாயினும், தேர்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய நாட்கள் தேவைப்படுவதால், ஜூலை 4ஆம் திகதியன்றும் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், கருத்துத் தெரிவித்த அமைச்சர் டலஸ் அழகப்பெரும எவ்வாறாயினும் இம்மாதம் 11ஆம் திகதியன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தலைமையில் நடைபெறவுள்ள கட்சிகளின் செயலாளர்களுடனான சந்திப்பின்போதே தேர்தல் தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்றார்.

இதேவேளை, தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்பது ஒருபுறமிருக்க, தேர்தல் தொடர்பான அன்றாட நடவடிக்கைகளைத் தேர்தல் ஆணைக்குழு முன்னெடுத்து வருவதாக தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரான ரட்ணஜீவன் ஹூல் தேர்தல் முறைகளை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பது தொடர்பான பணிகளையும் தேர்தல் செயலகப் பணியாளர்கள் முன்னெடுத்து வருவதாகக் கூறினார்.

அவ்வாறு தேர்தல் முறைகளை மாற்றுவது குறித்த பணிகள் முன்னெடுக்கப்பட்டாலும், இறுதியில் அது ஆணைக்குழுவிடமே அங்கீகாரத்துக்காக வருமென்றார்.

குறிப்பாக, வாக்களிக்க வருபவர்களின் விரல்களுக்கு மை பூசும் கட்டாயமுள்ளது. ஆனால் தற்போதைய கொரோனா சூழ்நிலையில் அது சாத்தியப்படாது என்பதால், மைக்கு பதிலாக ஒரு வகை ஸ்பிரே அடிப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும், ஆனால் அந்த ஸ்பிரே அடிக்கும் போது அது முழுகைக்கும் படுவதால், இது தொடர்பில் பரிசீலனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் குறித்துக் கலந்துரையாட, நாளை ஆணைக்குழுவில் விசேட கூட்டமொன்று நடைபெற இருப்பதாகவும், இதில் தேர்தல்கள் ஆணைக்குழு அங்கத்தவர்கள், தேவையேற்படின் தேர்தல் முறைகளில் மாற்றங்களை கொண்டு வருவதற்காக செயற்படுபவர்களும் அழைக்கப்படுவார்கள் என்றார்.

இந்தக் கலந்துரையாடல், 12ஆம் திகதியே நடைபெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 12ஆம் திகதி தேர்தலை பிற்போடுவது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் விசாரணைக்கு வருவதால், இந்தக் கலந்துரையாடலை நாளை திங்கட்கிழமைக்கு ஆணையாளர் மாற்றியுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேர்தலைப் பிற்போடுவது தொடர்பாக, ஆணைக்குழுவின் உறுப்பினர்களைப் பிரதிவாதியாகக் குறிப்பிட்டு, இதுவரை தனக்கு 3 நோட்டீஸ்கள் வந்துள்ளதாகவும், ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்தார்.

நாளை திங்கட்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய, இந்தக் கலந்துரையாடலுக்கு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கூட்டணிகளாகப் போட்டியிடும் கட்சியின் தலைவர்களையே அழைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் ஆணைக்குழுவில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கலந்துரையாடலுக்கு 4,5 கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணிகளில் ஒருவருக்கு மாத்திரமே அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததால், நடைபெறவுள்ள கலந்துரையாடலில் முன்னணிகளாகப் போட்டியிடும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## பொலிஸ் உத்தியோகத்தருக்கும் குடும்பத்தாருக்குமிடையே மோதல்

### சண்டிலிப்பாய் பகுதியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இரட்டைப் புலவு வைரவர் ஆலயத்துக்கு அருகில் நேற்று நண்பகல் சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கும் குடும்பத்தாருக்கும் இடையே மோதல் இடம்பெற்றுள்ளது.

இந்த மோதலில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் குறித்த வீட்டில் வசிக்கும் இளைஞன் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

குறித்த வீட்டில் வசிப்போருக்கு இடையே சில காலமாக முரண்பாடு இருந்துள்ளது இந்நிலையில் நேற்று மதியம் குறித்த வீட்டிற்கு சாதாரண உடையில் சென்ற இரு பொலிஸார் அங்கு உரையாடிய பின்பு வேலி பாய்ந்து குறித்த வீட்டிற்குள் பிரவேசித்ததை அடுத்து அங்கு குழப்பம் நிலவியது.

அவர்கள் எழுப்பிய குரல் கேட்டு அயலில் உள்ள இளைஞர்களும் குறித்த வீட்டுக்கு சென்றுள்ளனர். அங்கு இரு பகுதியினருக்கும் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் சிவில் உடையில் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் காயத்துக்கு உள்ளாகி இருந்தார் அத்தோடு குறித்த வீட்டை சேர்ந்த இளைஞன் ஒருவரும் காயத்திற்கு உள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து அந்த வீட்டிலுள்ள நால்வர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-3.9.104)

## வடக்கு மக்கள் நாளை தொடக்கம் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள்

### வட மாகாண சுகாதார சேவைகள் பணியகம் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்வின் போது பொதுமக்களினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாளை மே 11ஆம் திகதி முதல் நாட்டின் பொருளாதாரத்தினையும் மக்களின் வாழ்வாதாரத்தினையும் மேம்படுத்தும் நோக்குடன் ஊரடங்குசட்டம் உள்ளிட்ட பலகட்டுப்பாடுகளில் தளர்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆயினும் நாட்டில் கொரோனா பரம்பல் அபாயம் நீங்கிவிடவில்லை என்பதனை பொதுமக்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே மக்களை மிகவும் விழிப்புடனும் அவதானத்துடனும் பின்வரும் நடைமுறைகளினை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வேலைக்கு செல்வோர், அத்தியாவசிய விடயங்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்களினை கொள்வனவு செய்ய வெளியே செல்வோர் தவிர்ந்த ஏனையவர்கள் வீட்டிலேயே இருந்து ஒத்துழைப்பு வழங்குமாறு மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

அத்தியாவசிய தேவைகளிற்கு வெளியே செல்பவர்கள் தாம் செய்ய வேண்டிய வேலைகளுக்காக அடிக்கடி வெளியே செல்லாது ஒரே தடவையில் பல கருமங்களினை நிறைவேற்றிக்கொள்ளக் கூடியவகையில் திட்டமிட்டு செயற்படவும்.

வெளியே செல்பவர்கள் அலுவலகங்களிலும் பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் பொதுப் போக்குவரத்தின் போதும் இரண்டு பேருக்கு இடையில் ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் தூர இடைவெளியை பேணவும்.

வெளியில் செல்லும்போது இயன்றளவு பிரத்தியேக போக்குவரத்து முறைகளினை பாவிக்கவும். (உதாரணமாக நடந்து செல்லல், துவிச்சக்கர வண்டியில் செல்லல்).

அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள் என்பவற்றிற்கு உள்ளே நுழையும் முன்னர் கைகளினை சவர்க்கார மிட்டு முறைப்படி கழுவிக்கொள்ளவும்.

வெளியில் சென்றுவிட்டு வீடு திரும்பிய பின்பும் கைகளினை சவர்க்காரமிட்டு முறைப்படி கழுவிக் கொள்ளவும்.

காய்ச்சல், இருமல், தொண்டை நோய் போன்ற அறிகுறிகள் உடையவர்கள் பொது இடங்களிற்கு செல்வதனை தவிர்த்தல் வேண்டும்.

ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் பொது நிகழ்வுகள், வைபவங்கள், கூட்டங்கள் மற்றும் கேளிக்கை நிகழ்வுகள் போன்றவற்றிற்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதனை மனதில் கொள்ளவும்.

இயன்றளவு வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுகளினையே உண்பதனை பழக்கப்படுத்திக் கொள்வதுடன் உணவகங்களில் இருந்து உணவினை பெறவேண்டி இருப்பின் உணவினை எடுத்துச் சென்று உட்கொள்ளவும்.

மேலும் உணவகங்களில் ஒன்றுகூடி உணவு அருந்துவதை தவிர்த்துக் கொள்ளவும்.

உங்கள் பிரதேசத்திற்கு யாராவது புதியவர்கள் வருகை தந்திருந்தால் உங்களது பகுதி சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச்சுகாதார பரிசோதகர் அல்லது கிராம சேவையாளருக்கு அறியத்தரவும்.

அவர்களை தொடர்புகொள்வதில் சிரமம் இருப்பின் வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் அவசர அழைப்பெண் 021 222 6666 இற்கு தகவல் வழங்கவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## நள்ளிரவில் வீடுபுகுந்து ரவுடிக்கும்பல் அட்டகாசம்

### குரும்ப சிட்டிப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வசாவிளான் குரும்பசிட்டி பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு வீடொன்றுக்குள் புகுந்த ரவுடிக் கும்பல் வீட்டிலிருந்த பொருட்களை அடித்து நொருக்கியதுடன், வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்திவிட்டு தப்பி சென்றிருக்கின்றது.

இந்தசம்பவம் நேற்று முன்தினம் இரவு பதினொரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் தூங்கிக் கொண்டிருந்த நேரம் பார்த்து வீடு புகுந்த நபர்கள், வீட்டு மின் குமிழ்களை முதலில் அடித்து உடைத்துள்ளனர்.

பின்னர் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்தியதுடன் வீட்டின் யன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்து நொருக்கி உள்ளனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை ஊரடங்கு வேளையில் இவ்வாறு வீட்டுக்குள் புகுந்து இக் கும்பல் அட்டகாசம் புரிந்தமை அந்த பகுதி மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம-3)

பூமியின் மிகப்பெரிய செல்வம் மனிதனே. மனிதனின் மிகப்பெரிய செல்வம் அவனது மனமே. மனதின் வாளும் கேடயமுமாக இருப்பது அறிவும் அன்புமே.
– பென்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அச்சம் வேண்டும் அச்சம் வேண்டும்

அச்சமில்லை அச்சமில்லை உச்சி மீது வானிடிந்து வீழ்கின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்றான் பாரதி.

பாரதியின் இந்த வீர முழக்கம் சுதந்திர வேட்கையின் பாற்பட்டது.

அச்சமே அடிமைத்தனத்தின் மூலவேர் என்பதைக் கண்டறிந்த பாரதி அச்சமில்லை என்று நெஞ்சுரம் கொடுத்தான்.

இங்கு அஞ்சாமை என்பது எவ்வளவு பலமோ அதே பலம் அச்சம் என்பதற்கும் உண்டு.

இதை நாம் கூறும்போது நீங்கள் யாரேனும் நெற்றிப்புருவத்தை உயர்த்திக் கொள்ளலாம்.

ஆனால் நாம் கூறுகின்ற கருத்தியலுக்கு ஆதாரம் வள்ளுவனிடம் உண்டு.

வள்ளுவனைப் பொறுத்தவரை சூழ்நிலைக்கேற்ப அஞ்சாமையும் அச்சமும் தேவை என்றார்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்

என்பது வள்ளுவனின் முடிவு.

ஆம், அஞ்சவேண்டியவற்றுக்கு அஞ்சாமல் விடுவது பேதமை.

அஞ்ச வேண்டியவற்றுக்கு அஞ்சுவது அறிவின் வெளிப்பாடு.

எனவேதான் அச்சமடைய வேண்டியவற்றுக்கு அச்சம் கொள்ள வேண்டும் என்று கூறினோம்.

இப்போது உலகம் முழுமையையும் கொரோனாத் தொற்று ஆட்டிப் படைக்கிறது.

இருந்தும் ஒரு நாட்டில் கொரோனாத் தாக்கம் இருக்கின்ற போதிலும் அந்த நாட்டின் மாகாணம் மாவட்டம் என்ற உள்ளூர் எல்லைகளுக்குள் அதன் தாக்கம் உச்சமாகவோ அன்றி இல்லாமலோ இருக்கலாம்.

இவ்வாறாக இருக்கின்ற நிலைமையில் எமது மாகாணத்தில் கொரோனாத் தாக்கம் இல்லை என்று கருதி அதுபற்றி நாம் அச்சமடையாமல் சாதாரண சூழ்நிலைபோல நடந்து கொள்வோமாக இருந்தால்,

அதைவிட்ட துன்பம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

எனவே நாங்கள் வாழ்கின்ற இடத்தில் கொரோனாத் தாக்கம் இல்லை என்றோ அல்லது குறைவு என்றோ நினைத்துக் கொண்டு கண்டபாட்டில் நடந்து கொள்வோமாக இருந்தால் அதன் விளைவு பாரதூரமாக இருக்கும்.

எனவே நாளை 11ஆம் திகதியில் இருந்து ஊரடங்கு தளர்வு அமுலுக்கு வர இருக்கிறது.

இக்கால கட்டத்தில், கொரோனா என்ற கொடிய நோயின் அச்சத்தை நாம் மறப்போமாக இருந்தால், எங்கள் பகுதிகளிலும் கொரோனாத் தொற்று ஏற்படுகின்ற வாய்ப்பு உருவாகும்.

இதற்கு மேலாக, எதிர்வரும் தினங்களில் கொரோனாத் தொற்று அதிகரிக்கக்கூடும் என்று சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளமையும் இங்கு கவனத்திற்குரியது.

ஆகையால் ஊரடங்கு தளர்த்தப்பட்டு விட்டது என்பதை கொரோனா அச்சம் நீங்கி விட்டது என எவரும் கருதிவிடக் கூடாது என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

# கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த தனிமைப்படுத்தல் செயற்பாடு மிக முக்கியம்

## பி.சி.ஆர் பரிசோதனை இரண்டாம் பட்சம் வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவிப்பு




(கொழும்பு)

ஊரடங்கு தளர்த்தப்பட்டபின் பொது மக்கள், எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பில் சுகாதார அமைச்சால் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இதற்கமைவாக வைரஸ் தொற்று காலத்துக்கு முன்பு போல் அல்லாமல் அதன் பின்னர் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை நாம் சிந்தித்து செயற்படுவது அவசியம் என்று தெரிவித்த அவர், குறிப்பாக அரச , அரச சார்பற்ற மற்றும் ஏனைய நிறுவனங்கள் கைத்தொழில் துறை நிறுவனங்கள் உட்பட அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோருக்கும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன.

சுகாதார அமைச்சின் இணையத்தளத்திலும், பிரதமர் அலுவலக இணையத் தளத்திலும் அதனைப் பார்வையிட முடியும். இதனை அறியவில்லை எனக் கூறி தட்டிக்கழிக்க முடியாது என்று தெரிவித்த பணிப்பாளர் நாயகம் இந்த விடயங்களில் தெளிவில்லை என்றால் எமது அதிகாரிகள் குழு அதனை தெளிவுபடுத்தத் தயாராகவுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு தவிர்ந்த வெளியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பி.சி.ஆர். பரிசோதனைகள் தரமற்றவையென மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ,

இவ்வாறு தற்போது பிரசாரங்களை மேற்கொளபவர்களே முன்பு அதற்காக பல்கலைக்கழகங்கள் மற்றும் கற்கை பீடங்கள் உள்ளிட்ட நிறுவனங் களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரியிருந்தனர். பி.சி.ஆர் பரிசோதனையா- அல்லது தனிமைப்படுத்தல் செயற்பாடுகளா? எது மிக முக்கியமென பார்க்கும்போது தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் மிக முக்கியமானதும் அவசியமுமாகிறது.

தனிமைப்படுத்தலுக்குப் பின்னரும் கூட பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளலாம். எனினும் கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறிவதற்குத் தனிமைப்படுத்தல் மிக முக்கியமாகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறெனினும் பரிசோதனைக்கூடங்கள் தற்போது விரிவாக்கப்பட்டு பரிசோதனைகளின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. இதில் பல்வேறு நிறுவனங்கள் ஏற்கனவே பரிசோதனைகளை முன்னெடுத்த போதும் கொரோனா வைரஸ் தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனை தொடர்பில் அவர்களுக்குத் தெளிவூட்டப்பட்டுள்ளது.

அதேவேளை இத்தகைய பரிசோதனை கூடங்கள் ஆரம்பிக்கப்படும் முன்பே அது தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

நாம் அதற்கு மேலதிகமாக தற்போது மேற்படி பரிசோதனைக் கூடங்கள் தொடர்பில் மேலும் மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளோம். அதனையடுத்து நாம் பேராசிரியர் மலிக் பீரிஸின் ஒத்துழைப்புடன் சகல பரிசோதனைக் கூடங்களையும் தனித் தனியாகத் தரப்படுத்தலுக்கு உட்படுத்தவுள்ளோம். அதேபோன்று எமது நீண்ட காலவேலைத்திட்டமாக உலக சுகாதார அமைப்பின் மூலம் அவற்றைத் தரநிர்ணயம் செய்வதற்கு உத்தேசித்துள்ளோம்.

எவ்வாறாயினும் காலத்துக் காலம் பொருத்தமான வகையில் அவற்றைக் கண்காணிப்புக்கு உட்படுத்துவது இடம் பெறும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க மேலும் தெரிவித்தார். (இ)

# 7 வாரத்திற்கு பின் மீள நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ள கொழும்பு பங்குச் சந்தை

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தை நடவடிக்கையானது நாளை 11 ஆம் திகதி மீள தனது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதன் மூலம் மார்ச் 20 ஆம் திகதி ஊடரங்கு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து கொழும்பு பங்குச் சந்தையின் 7 வார கால செயலற்ற தன்மை முடிவுக்குக் கொண்டு வரப்படவுள்ளது.

திங்கட்கிழமை முதல் பொது மற்றும் தனியார்த்துறை நிறுவனங்கள் மீண்டும் பணிகளைத்தொடங்க வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்ததன் விளைவாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பங்குச் சந்தையின் தலைமை நிர்வாக அதிகாரி ராஜீவ பண்டாரநாயக்க பங்குதாரர்களிடம் சுகாதார அதிகாரிகள் வழங்கிய வழிகாட்டுதல்களுக்கு இணாங்க தங்கள் வணிக நடவடிக்கைகள் நடத்தப்படுவதை உறுதி செய்யுமாறு ஆலோசனை வழங்கினார்.

இலங்கையில்கொரோனா பரவுவதைத் தொடர்ந்து 2020 மார்ச் 16 ஆம் திகதி முதல் கொழும்பு பங்குச் சந்தையானது மூடப்பட்டது. அதன் பின்னர் மார்ச் 20 அன்று வ ரையறுக்கப்பட்ட வர்த்தக காலத்திற்கு மாத்திரம் திறக்கப்பட்டது.

அன்றைய தினம் மாலை நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து எந்த வர்த்தகமும் இடம்பெறவில்லை.

இதனால் கொழும்பு பங்குச் சந்தையானது கொவிட் -19 காரணமாக பிராந்தியத்தில் மிக நீண்ட காலமாக மூடப்பட்ட பங்குச் சந்தையாக மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இலங்கையில் இறுதியாக அடையாளம் காணப்பட்ட 11 கொரோனாத் தொற்றாளர்களும் கடற்படையினர்

## இராணுவத் தளபதி சவேந்திர தகவல்



(கொழும்பு)

இலங்கையில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத்தொற்றாளர்கள் 835 பேரில் 404 பேர் கடற்படையினர் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட 11 கொரோனாத் தொற்றாளர்களும் வெலிசர கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை யினர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 240 ஆக உயர்வடைந்தது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான 16 கடற்படையினர் குணமடைந்தனர்.

இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்றால் 9 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கொவிட் - 19 நிதிய வைப்பு 900 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை வெளிநாட்டு சேவைகள் அதிகாரிகள் சங்கம் 2.8 மில்லியன் ரூபாவை கொவிட் - 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்திற்காக ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தது. அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும் இந்நிகழ் வில் கலந்து கொண்டார்.

சப்ரகமுவை மாகாண சபை நிதியம் ஒரு மில்லியன் ரூபாவையும் இரதினபுரியைச் சேர்ந்த ஜானக ரணவக்க ஒரு இலட்சம் ரூபாவையும் இரத்தினபுரி மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்ததுடன், அதற்கான காசோலைகள் மாகாண ஆளுநர் டிகிரி கொப் பேகடுவையால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்ப ட்டன.

இலங்கை மத்திய வங்கியின் ஓய்வுபெற்ற அதிகாரிகளின் சங்கம் 5 இலட்சம் ரூபாவையும் இலங்கை டெலிகொம் பௌத்த சங்கம் 3 இலட்சம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்தன.

இதேவேளை லங்கா சீனி தனியார் கம்பனி நேரடியாக வைப்பு செய்த 3.5 மில்லியன் ரூபாவுடன் கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் மீதி தற்போது 900 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது.

(இ)

# குண்டுத் தாக்குதல் தொடர்பாக மீண்டும் தேடுதல் நடவடிக்கை




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவின் ஆரையம்பதி செல்வாநகர் கிழக்கு பாலமுனை பிரதேசத்திலுள்ள வாடகை விடுதி யொன்றில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியான ஸஹ்றான் காசீம் பெண்களுக்கு பயிற்சியளித்ததாக சந்தேகிக்கப்படும் இடமொன்றை நேற்று முன்தினம் பிற்பகல் பாதுகாப்பு அதிகாரிகள் சோதனை செய்தது டன் தேடுதல் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவின் ஆரையம்பதி செல்வாநகர் கிழக்கு பாலமுனை பிரதேசத்திலுள்ள வாடகை விடுதி யொன்றே இதன் போது சோதனைக்குட்படுத்தப்பட்டது. குற்றத் தடுப்பு பிரிவு மற்றும் விஷேட அதிரடிப்படையினர் இந்த சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். குறித்த விடுதியின் காணி மற்றும் விடுதிக் கட்டிடம் என்பன முழுமையாக சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் விசாரணைகளிலும் ஈடுபட்டனர். (இ-4-285)

# விடத்தற்பளையில் தனிமைப்படுத்தலில் இருந்து 297 பேர் நேற்று காலை வீடு திரும்பினர்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விடத்தல்பளை கொரோனா தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்தில் இருந்து சிகிச்சை பெற்ற 298 பேர் சிகிச்சை அளிக்கப்பட்டு பூரண குணமடைந்த நிலையில் நேற்று அவர்களது வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையில் இருந்து கடந்த மாதம் 22 ஆம் திகதி கொவிட் -19 தொற்று சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் விடத்தல்பளை சுய தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இவ்வாறு அழைத்து வரப்பட்டு சுய தனிமைப்படுத்தல் நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்ட 298 பேரும் விடத்தல்பளை 522 வது படைத்தலைமையத்தில் இருந்து நேற்று கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வாறு சுய தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து சிகிச்சை பெற்றவர்களில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன் மற்றயவர்கள் பூரண குணமடைந்து. யாழ்ப்பாண கட்டளைத் தளபதி ரூவான் வணிகசூரிய தலைமையில் இராணுவத்தினரால் அவர்களின் சொந்தஇடங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-4-101)

# கிளிநொச்சியில் தொற்று நீக்கும் செயற்பாடுகள் நேற்று முன்னெடுப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் கொரோனா தொற்று நீக்கும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த வேலைத்திட்டம் நேற்று காலை 9 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜயர் ஜெனரல் ஜெயந்த குணரட்ணவின் ஆலோசனைக்கமைவாக கிளிநொச்சி 57வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் டி சில்வாவின் வழி நடத்தலில் காலாற் படையினரால் குறித்த தொற்று நீக்கும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பொது மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளான வங்கிகள். பேருந்து நிலையம் மற்றும் தரிப்பிடங்கள், வர்த்தக நிலையங்கள். நடை பாதைகள் மக்கள் கூடும் பகுதிகள் என தொற்று நீக்கம் செய்யப்பட்டது.

கிளிநொச்சி பொது சுகாதார பிரிவினரின் கண்காணிப்பில் தொற்று நீக்கம் கலவைகள் விசிறப்பட்டதுடன். சுகாதார அதிகாரிகளும் பொலிஸாரும் நிகழ்வில் கலந்து கொணடனர். (இ-4-100)

# சிகை அலங்கரிப்பு உரிமையாளர்களுக்கு சுகாதாரப் பிரிவின் அறிவித்தல்

(சாவகச்சேரி)

சிகை அலங்கரிப்பு நிலையங்களை உரிய கட்டுப்பாட்டுடன் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கும் நிலையில் சாவகசசேரி சுகாதாரப் பிரிவினர் சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கும் முகமாக அவசர கலந்துரையாடல்களை தென்மராட்சிப் பகுதியில் ஏற்பாடு செய்துள்ளனர். அந்தவகையில் மட்டுவில். சரசாலை. கைதடி மற்றும் நாவறகுழிப் பகுதி சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10மணிக்கு கைதடி விநாயகர் சனசமூக நிலையத்திலும். சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கு திங்கட்கிழமை காலை 10மணிக்கு சாவகச்சேரி பொன்விழா மண்டபத்திலும். அதே நேரம் கொடிகாமம். வரணி. மந்துவில். எழுதுமட்டுவாழ் மற்றும் மிருசுவில் பகுதி சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்க் சாவகச்சேரி பிரதேச சபை மண்டபத்திலும் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

குறித்த கலந் துரையாடலில் பங்குபற்றி சுகாதார ஆலோசனைகளைக் கடைப்பிடித்து சாவகச்சேரி சுகாதாரப் பிரிவின் அனுமதியைப் பெற்ற பின்னரே சிகை அலங் கரிப்பு நிலையங்களைத் திறக்க முடியும் எனவும் தெரிவித்தனர். (இ-4-30)

## (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2034 facebook

**நிஷானி**



வார்த்தைகளால் விபரிக்க முடியாத படம்

**மதுரன்**

பிறர் நம்மை பாரம் என்று நினைத்து விட்டால்நாம் தூரமாய் நிற்பதே நல்லது



**விக்கி**

மேனேஜர் : ஊரடங்கு முடிஞ்சிடிச்சி ஆபிஸ் வரவும் ஓவர் ஓவர்



ஆபிஸ் அட்ரஸ் மறந்திடிச்சி லொக்கேசனை வாட்சப்ல அனுப்புங்க ஓவர் ஓவர்

**செல்வா**



எது அறிவில்லாத நாய்னு தெரியுதா

**சங்கவி**

கொரோனா : என்னப்பா bio படிக்குறியா




வேணாம்ங்க அத படிச்சி உங்க கூட சண்டை போட தெம்பில்லைங்க

**லசிந்தா**

என்ன மாப்ள டவுசர் எல்லாம் சாணிய பூசி வச்சிருக்க



மாமா உங்களுக்கு விசியமே தெரியாதா சாணிடவுசர் போட்டா கொரோனா வராதாம்
மாப்ள அது சாணிடவுசர் இல்லை சானிடைசர்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கொரோனாவால் பரவும் காசநோய்!

## 5 ஆண்டுகளில் 14 இலட்சம் பேர் உயிரிழப்பு

## அதிர்ச்சித் தகவல் வெளியீடு



(நைரோபி)

கொரோனாவால் பரவும் காச நோய்க்கு அடுத்த 5 ஆண்டு களில் உலகளவில் வழக்கத்தை விட கூடுதலாக 14 இலட்சம் மக்கள் உயிரிழப்பார்கள் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகினது.

கொரோனா வைரஸ் மனித சமுதாயத்தில் பல்வேறு தாக் கங்களை ஏற்படுத்தி வருகிறது. இலட்சக்கணக்கான மக்களின் உயிரைக் குடித்ததுடன் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளின் பொருளாதாரத்தையும் அப்படியே புரட்டிப் போட்டுவிட்டது.

கொரோனா பரவலால் பிறப் பிக்கப்பட்ட ஊரடங்கு காரண மாக பெரும்பாலான நாட்டு மக் கள் கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர்.

இது, காச நோயாளிகள் அதி கம் வாழும் கென்யா, இந்தியா, உக்ரைன் ஆகிய நாடுகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத் தியிருப்பதாக 'ஸ்டாப் டி.பி என்னும் உலகளாவிய அமைப்பு சுட்டிக்காட்டியது.

வேலை காரணமாக வீட்டிலி ருந்து வழக்கமாக வெளியே சென்று வரும் நபர்கள் 24 மணி நேரமும் வீட்டிலேயே இருப் பதால் அதே வீட்டில் வசிக்கும் காச நோயாளிகளால் இந்த நோ ய்த் தொற்றின் பாதிப்புக்குள்ளாக நேரிடுகிறது.

இதனால் காசநோய் பரவும் அபாயமும் அதிகம் உள் ளது என்று விளக்குகிறது இந்த அமை ப்பு.

இதனால் அடுத்த 5 ஆண்டு களில் உலகளவில் காசநோய்க்கு வழக்கத்தை விட கூடுதலாக 14 இலட்சம் மக்கள் உயிரிழப்பார் கள் எனவும் ஸ்டாப் டி.பி. அமை ப்பு கணிப்பிட்டது.

இது தொடர்பாக லண்டன் இம்பீரியல் கல்லூரியின் தொற்று நோய்த் துறையின் இணை பேரா சிரியர் நிமலன் கூறுகையில், "காசநோய் விடயத்தில் கொரோனா ஊரடங்கிற்கு முந்தைய நிலை ஏற்பட நீண்ட காலம் பிடிக்கும். ஏனென்றால் ஊரடங்கு காலத் தில் காச நோயாளிக்கு உரிய மருத்துவமோ, சேவையோ கிடை த்திருக்காது. எனவே இதன் தாக் கம் பல ஆண்டுகள் நீடிக்கலாம்" எனத் தெரிவித்தார். (இ)

## மேலும் 17 பேருக்கு சீனாவில் கொரோனா

(பீஜிங்)

சீனாவில் புதிதாக 17 பேரு க்குக் கொரோனா வைரஸ் பாதி ப்பு ஏற்பட்டது.

இவர்களில் 16 பேருக்கு அறிகுறியே இல்லாமல் கொ ரோனா தொற்றியது.

இந்த 16 பேரும் ஹூபேய் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். ஜிலின் மாகாணத்தில் ஒருவ ருக்குப் பாதிப்பு ஏற்பட்டது குறிப் பிடத்தக்கது. (இ)

## இந்தியாவில் அறுபது ஆயிரத்தை நெருங்கியது கொரோனா பாதிப்பு!

## 1981 பேர் உயிரிழப்பு



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை அறுபது ஆயிரத்தை நெருங்கிய நிலையில் 1981 பேர் உயிரிழ ந்தனர்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு நோய் அறி குறி உள்ளவர்களைத் தனிமைப் படுத்தி சிகிச்சையளித்தல் உள் ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன் னெடுக்கப்படுகின்றன.

கொரோனா பாதிப்பு குறை வாகவுள்ள பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

எனினும் பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க புதிய நோயாளிகளின் எண்ணிக்கை யும் உயர்ந்து வருகிறது. உயிரிழ ப்பும் கணிசமாக உயர்கிறது.

இந்நிலையில் மத்திய சுகா தாரத்துறை நேற்று வெளியிட்ட தகவலின்படி இந்தியாவில் கொ ரோனா தொற்று உறுதி செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை அறுபது ஆயிரத்தை நெருங் கியது.

மொத்தம் 59 ஆயிரத்து 662 பேர் கொரோனாவால் பாதிக் கப்பட்டனர். கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 3320 பேரு க்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. 95 பேர் உயிரிழந்தனர்.

இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண் ணிக்கை 1981 ஆக உயர்ந்தது. இதுவரை 17 ஆயிரத்து 847 பேர் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டனர். கடந்த 24 மணி நேர த்தில் 1307 பேர் குணமடைந்து வீடு திரும்பினர்.

கொரோனா பாதிப்பில் மகாரா ஷ்டிரா தொடர்ந்து உச்சத்தி லுள்ளது. மகாராஷ்டிராவில் மொத்தம் 19063 பேருக்கு தொ ற்று உறுதி செய்யப்பட்டது.

731 பேர் பலியாகினர். குஜ ராத்தில் இதுவரை 7402 பேருக் கும், டில்லியில் 6318 பேருக்கும் தமிழகத்தில் 6009 பேருக்கும், மத்திய பிரதேசத்தில் 3341 பேருக்கும் இராஜஸ்தானில் 3579 பேருக்கும் உத்தர பிரதேசத்தில் 3214 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. (இ)

## ஆபிரிக்காவில் இந்த ஆண்டு ஒரு இலட்சத்து 90 ஆயிரம் பேர் கொரோனாவுக்கு பலியானவர்கள்

## உலக சுகாதார நிறுவனம் கணிப்பு



(வோஷிங்டன்)

ஆபிரிக்காவில் இந்த ஆண்டு கொரோனா வைரஸுக்கு ஒரு இலட்சத்து 90 ஆயிரம் பேர் வரை பலியாவார்கள் என்று உலக சுகாதார நிறுவனம் கணித்தது.

உலக சுகாதார நிறுவனத் தின் ஆபிரிக்காவுக்கான பிராந் திய அலுவலகம் ஆபிரிக்காவில் கொரோனா வைரஸ் பாதிப்பு குறித்து ஒரு ஆய்வு நடத்தியது. அதன் முடிவுகளை ஒரு அறிக்கை யாக வெளியிட்டது.

அந்த அறிக்கையில்:-

ஏனைய நாடுகளைப் போன்று ஆபிரிக்காவில் கொரோனா வை ரஸ் வேகமாகப் பரவ வாய்ப் பில்லை. அபாய பகுதிகளில் மட்டும் படிப்படியாகப் பரவும்.

அந்த வகையில் தடுப்பு நட வடிக்கைகள் தோல்வியடைந் தால் ஆபிரிக்காவில் இந்த ஆண்டு 83 ஆயிரம் பேர் முதல் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் பேர் வரை பலியாவார்கள். 2 கோடி யே 90 இலட்சம் பேர் முதல் 4 கோடியே 40 இலட்சம் பேர் வரை பாதிக்கப்படுவார்கள்.

தீவிர தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், இன்னும் பல ஆண்டுகளுக்கு அன்றாட வாழ்க்கையில் ஒரு அங்கமாக கொரோனா உருவெடுத்து விடும்.

எனவே பரிசோதனை, தொட ர்புகளைக் கண்டறிதல், தனிமை ப்படுத்தல், சிகிச்சை போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ப்பட வேண்டும் என அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்ப ட்டது. (இ)

## கொரோனாவுக்கு எதிரான போரில் வெற்றி

## சீனாவுக்கு உன் பாராட்டு

(பீஜிங்)

கொரோனா வைரஸுக்கு எதிரான போரில் வெற்றி பெற்ற தாகக் கூறி சீனாவுக்கு வடகொ ரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் பாராட்டு தெரிவித்தார்.

சீனாவின் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் தோன்றிய உயிர்க்கொல்லி கொ ரோனா வைரஸ் தற்போது 210 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி உயிர்ப் பலி வாங்கி வருகிறது.

உலகளவில் வைரஸ் தொற் றுக்குள்ளானவர்களின் எண்ணிக் கை 40 இலட்சத்தை கடந்து சென்று கொண்டிருக்கிறது. பலி எண்ணிக்கை விரைவில் 3 இல ட்சத்தை எட்டும் நிலையிலுள்ளது.

அமெரிக்கா, ஸ்பெயின், இத் தாலி உள்ளிட்ட பல நாடுகள் கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கித் திணறி வரும் நிலையில் கொரோனா வைரஸ் பரவலின் மையமாக இருந்த சீனா, வை ரஸ் பாதிப்பிலிருந்து மீண்டு இயல்பு நிலைக்குத் திரும்பியது.

இந்நிலையில் கொரோனா வைரஸுக்கு எதிரான போரில் சீனா வெற்றி பெற்றதாகக் கூறி ஜனாதிபதி ஜின் பிங்குக்கு, வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் பாராட்டுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜின் பிங்குக்கு, கிம் தனிப்பட்ட முறையில் வாழ் த்து செய்தி அனுப்பியதாக வடகொரி யாவின் அரசு செய்தி நிறுவன மான கே.சி.என்.ஏ. தெரிவித்தது.

இது பற்றி கே.சி.என்.ஏ. வெளி யிட்ட செய்தியில், "கொரோனா வுக்கு எதிரான போரில் வெற்றி பெற்ற சீனாவுக்கு வடகொரிய ஜனாதிபதி கிம் பாராட்டு தெரிவித் தார். மேலும் கிம்மின் உடல் நலம் குறித்து சீன ஜனாதிபதி ஜின்பிங் விசாரித்தார்" என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் கிம், எப்போது ஜின்பிங்குக்கு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பினார் என்ற தகவல் வெளியிடப்படவில்லை.



கொரோனா வைரஸை சீனா வேண்டுமென்றே பரப்பி விட்ட தாகவும் வுஹான் நகரிலுள்ள ஒரு ஆய்வகத்தில் இந்த வைரஸ் உருவாக்கப்பட்டதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வரும் நிலையில் வடகொரிய ஜனாதி பதி கிம் ஜாங் உன் சீனாவுக்குப் பாராட்டு தெரிவித்திருப்பது முக்கி யத்துவம் வாய்ந்ததாக பார்க்கப் படுகிறது.

வர்த்தக ரீதியிலும் நட்பு ரீதியி லும் வடகொரியாவுக்கு சீனா மிகவும் நெருக்கமான நாடு என்ப தும் தற்போது வரை வடகொரியா வில் ஒருவருக்குக் கூட கொரோ னா தொற்று உறுதி செய்யப்பட வில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. (இ)

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 847 | 260 | 009 | 578 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 4,073,639 | 1,417,305 | 278,912 |

# வங்குரோத்து நிலையில் அரசு

## அரவிந்தகுமார் விமர்சனம்



(பதுளை)

அரச ஊழியர்களின் மே மாத சம்பளத்தை பெற்றுக்கொள்ள முற்படுவது அரசாங்கத்தின் வங்குரோத்து நிலைமையை எடுத்துக்காட்டுவதாக பதுளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி செயலக கடித தலைப்பில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர இவ்வாறான கோரிக்கையை முன்வைத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, அதனை ஜனாதிபதி செயலாளரின் தனிப்பட்ட கோரிக்கையாக கருத முடியாது எனவும் அரவிந்த குமார் கூறினார்.

தற்போது தேவையில்லா தேர்தல் ஒன்றை நடத்த அரசாங்கம் முற்படும் நிலையில் இவ்வாறு அரச ஊழியர்களின் ஒருமாத சம்பளத்தைக் கேட்பது தேர்தலுக்கான செலவீனத்தை ஈடு செய்யவா? எனவும் அரவிந்த குமார் கேள்வியெழுப்பினார். (இ)

# அதிகாலை ஒரு மணியளவில் வீட்டுக்குள் புகுந்த யானை



(ஏறாவூர்)

மட்டக்களப்பு - பதுளை வீதி சர்வோதய நகர் கிராமத்தில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வீட்டிற்குள் புகுந்த யானை சுவரை உடைத்துச் சேதப்படுத்தியது.

அண்மைக்காலமாக அதிக யானைகள் மக்கள் குடியிருப்புக்களுக்குள் நுழைவதனால் மக்கள் பெறும் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

இந்நிலையில் யானைத் தாக்குதலிலிருந்து தெய்வாதீனமாக குறித்த வீட்டிலிருந்த பெண் தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)




# 33 ஆயிரத்து 899 கொரோனாவுக்கான பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

கொரோனாவைரஸ் தொற்றைக் கண்டறிவதற்காக நேற்று முன்தினம் மாத்திரம் 1,821 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி இதுவரை நாட்டில் மொத்தமாக 33 ஆயிரத்து 899 பி.சி. ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் தரவுகள் சுட்டிக்காட்டின.

ஒரே நாளில் நாட்டில் அதிகளவான பி.சி. ஆர். பரிசோதனைகள் கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினம் மொத்தமாக 1,869 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# திங்கள் முதல் அதிவேக நெடுஞ்சாலைகள் திறப்பு

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட ஏனைய நெடுஞ்சாலைகள் நாளை 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பொது மக்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகத் திறக்க ப்படும் என்று வீதி அபிவி ருத்தி அதிகார சபை தெரிவித்தது.

திங்கட்கிழமை முதல் பொது மற்றும் தனியார்த் துறை நிறுவனங்கள் மீண்டும் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்ததன் விளைவாக இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதனிடையே கொழும்பு, புறக்கோட்டை மெனிங் சந்தையின் செயற்பாடுகளானது அன்றைய தினம் முதல் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# ஆஸியிலிருந்து இலங்கை வந்த 165 பங்களாதேஷ் மாணவர்கள் டாக்கா நோக்கி அனுப்பிவைப்பு



(கொழும்பு)

கொரோனா பரவலால் அவுஸ்திரேலியாவில் சிக்கித் தவித்த 165 பங்களாதேஷ் மாணவர்களை கொண்ட குழுவொன்று நேற்று முன்தினம் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் விமானம் மூலமாக கொழும்பை வந்தடைந்தது.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னிலிருந்து வருகை தந்த ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல் - 605 என்ற சிறப்பு விமானமானது நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியதாக விமான நிலைய அதிகாரி யொருவர் உறுதிப்படுத்தினார்.

மெல்பேர்னிலிருந்து பங்களாதேஷின் டாக்காவுக்கு நேரடி விமானங்கள் இல்லாததால் இவ்வாறு பங்களாதேஷ் மாணவர்கள் இலங்கையை வந்தடைந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததும் அனைத்துப் பயணிகளும் அவர்களது பொதிகளும் கிருமி நீக்கம் செய்யப்பட்டன.

அதைத்தொடர்ந்து பயணிகள் டாக்காவுக்கு செல்லும் இலங்கை விமான சேவைக்குச்சொந்தமான யு.எல்.1422 என்ற விமானத்துக்கு மாற்றப்பட்டனர்.

இந்நிலையில் இலங்கையில் சிக்கித் தவித்த மேலும் 11 மாணவர்கள் அடங்கலாக மொத்தமாக 176 பங்களாதேஷ் மாணவர்கள் குறித்த விமானத்தில் இரவு 10 மணியளவில் டாக்கா நோக்கிப் புறப்பட்டதாகவும் விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். (இ)

# 40 இலட்சத்தைத் தாண்டியது உலகளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை

(ஜெனிவா)

உலகளவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி 40 இலட்சத்தைத் தாண்டியது.

உலக நாடுகள் கடுமையாக எதிர்த்துப் போராடி வருகின்ற நிலையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 40 இலட்சத்து 10 ஆயிரத்து 694 ஆக அதிகரித்தது.

நாளுக்கு நாள் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் பலியாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதால் உலக நாடுகள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றன.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்று குறைந்த நாடுகள் ஊரடங்கு உத்தரவைத் தளர்த்தி வருகின்றன. இதனால் மேலும் பாதிப்பு அதிகரிக்கக் கூடும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# வெறுப்பு பேச்சுக்களுக்கு முடிவு கட்ட வேண்டும்!

## ஐ.நா.பொதுச்செயலாளர் வேண்டுகோள்

(நியூயோர்க்)

கொரோனா பாதிப்பு தொடர்பான வெறுப்பு பேச்சுக்களுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று ஐ.நா.பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸ் வேண்டுகோள் விடுத்தார்.

பெருந்தொற்று நோயான கொரோனா பல்வேறு நாடுகளிலும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. நோய் பரவலைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் சுனாமியைப் போல் வெறுப்பு பேச்சுக்களை பேசுவது, மற்றவர்களை பலிக்கடா ஆக்குவது, பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வது அதிகரித்துள்ளது.



இணையத்தளங்கள் மூலமும் வீதிகளிலும் வெளிநாட்டினருக்கு எதிரான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. புலம் பெயர்ந்த தொழிலாளர்களும் அகதிகளும் நோய்த் தொற்றுக்குக் காரணம் என்று கூறி அவர்களுக்கு சிகிச்சை மறுக்கப்படும் சம்பவங்களும் நடந்துள்ளன.

முஸ்லிம்கள் தாக்கப்படும் சம்பவங்களும் நடந்திருக்கின்றன.

இத்தகைய நடவடிக்கைகளுக்கும் வெறுப்பு பேச்சுக்களுக்கும் முடிவு கட்ட வேண்டும். அனைவரையும் கண்ணியத்துடன் நடத்துவதோடு அன்பைப் பரப்ப வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

கொரோனாத் தொற்றுக்கு முதியோர்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் ஏற்படும் செலவை குறிப்பிட்டு மீம்ஸ்கள் வருவது கண்டிக்கத்தக்கது. தங்கள் பணிகளில் ஈடுபடும் மருத்துவ மற்றும் சுகாதாரப் பணியாளர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் தாக்கப் படுவதற்கும் முடிவு கட்டியாக வேண்டும்.

இதற்கான முயற்சிகளை அனைத்துத் தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும். அரசியல் தலைவர்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஆதரவாக நடந்து கொள்ள வேண்டும்.

ஊடகங்கள் குறிப்பாக சமூக ஊடகங்கள் இன பாகுபாடு காட்டுவது போன்ற சமுதாயத்துக்கு தீங்கு செய்யும் வகையிலான கருத்துக்கள் தங்கள் தளங்களில் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மாறி வரும் சூழ்நிலைக்கு ஏற்ப கல்வி நிறுவனங்கள் இணைய நேரலை மூலம் பாடம் நடத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இராணுவ அதிகாரிக்குக் கொரோனா ட்ரம்ப்புக்கு தினந்தோறும் பரிசோதனை



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியின் பாதுகாப்புப்பிரிவு இராணுவ அதிகாரிக்குக் கொரோனாத் தொற்று உறுதியானதையடுத்து தினந்தோறும் பரிசோதனை மேற்கொள்ள ட்ரம்ப் முடிவு செய்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பாதுகாப்புப்பிரிவு இராணுவ அதிகாரிக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து ட்ரம்புக்கும் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் வெள்ளை மாளிகை ஊழியர்களுக்கும் கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் அவர்களுக்கு கொரோனா பாதிப்பு இல்லை என்று தெரியவந்தது.

இது குறித்து ட்ரம்ப் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் :-

எனது பாதுகாப்புப் பிரிவு இராணுவ அதிகாரி நல்ல மனிதர். அவரை நான் அவ்வளவாக தொடர்பு கொண்டதில்லை. மைக் பென்சும் அப்படித்தான்.இருப்பினும் நாங்கள் பரிசோதனை செய்து கொண்டோம். இதேவேளை தினந்தோறும் பரிசோதனை செய்து கொள்ள முடிவு செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ரஷ்யாவை உலுக்கும் கொரோனா வைரஸ் 6 நாளில் 60 ஆயிரம் பேருக்கு பாதிப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவில் கடந்த 6 நாட்களில் 60 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொரோனா வைரஸால் பாதிப்படைந்தனர் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியானது.

சீனாவின் வுஹான் நகரில் உருவான கொரோனா வைரஸால் உலகம் முழுவதும் கடும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

ரஷ்யாவில் கொரோனா வைரஸைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை அந்நாட்டு ஜனாதிபதி புடின் எடுத்து வருகிறார்.

தற்போது ஊரடங்கின் ஐந்தாவது வாரத்தில் உள்ளது. கொரோனா வைரஸ் காரணமாக எண்ணெய் மதிப்பு சரிந்துள்ள நிலையில் ரஷ்யா கடும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியது.

குறிப்பாக கடந்த ஆறு நாட்களில் அந்நாட்டில் புதிதாக 60 ஆயிரம் பேருக்கு மேல் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை 9 மணியளவில் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 10 ஆயிரத்து 669 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இதன்மூலம் தொடர்ந்து 6 ஆவது நாளாக அங்கு 10 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று உறுதியாகியது.

ரஷ்யாவில் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 859 ஆக அதிகரித்தது. கொரோனாத் தொற்றுக்கு இது வரை அங்கு 1,723 பேர் உயிரிழந்தனர். (இ)

# அமெரிக்காவில் கொரோனாவால் 13 இலட்சத்து 21,785 பேர் பாதிப்பு 78 ஆயிரத்து 615 பேர்உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 13 இலட்சத்து 21 ஆயிரத்து 785 ஆக உயர்ந்த நிலையில், அங்கு பலி எண்ணிக்கை 78 ஆயிரத்து 615 ஆக உள்ளது. குணமடைந்தோரின் எண்ணிக்கை 2 இலட்சத்து 23 ஆயிரத்து 603 ஆக உயர்ந்தது.

ஸ்பெயினில் 2 இலட்சத்து 60 ஆயிரத்து 117 பேர் பாதிக்கப்பட்டனர். பலியானோரின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 299 ஆக உயர்ந்தது. இங்கு குணமடைந்தோரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 408 ஆனது.

இத்தாலியில் 2 இலட்சத்து 17 ஆயிரத்து 185 பேர் பாதிக்கப்பட்டனர். 30 ஆயிரத்து 201 பேர் இங்கு பலியாகினர்.

பிரிட்டனில் ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 859 ஆக கொரோனா பாதிப்புள்ளது. மொத்தமாக 31 ஆயிரத்து 241 பேர் பலியாகினர்.

பிரேசிலில் ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 892 பேர் பாதிக்கப்பட்டனர். 9 ஆயிரத்து 992 பேர் பலியாகினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# ஈரானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் 2 பேர் உயிரிழப்பு - 22 பேர் படுகாயம்

(தெஹ்ரான்)

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி 60 வயது முதியவர் உட்பட 2 பேர் உயிரிழந்தனர். 22 பேர் படுகாயமடைந்தனர்.

ரிக்டர் அளவுகோலில் 5.1 புள்ளிகளாக பதிவான இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 7 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக ஈரான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் பயங்கரமாகக் குலுங்கின.

ஏராளமான கட்டடங்கள் இடிந்து சேதமடைந்தன. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட முழுமையான பாதிப்புக்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (இ)



# இந்தோனேசியாவில் பரவும் மாறுபட்ட கொரோனா வைரஸ்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் பரவி வரும் கொரோனா வைரஸின் வகை மற்ற நாடுகளிடமிருந்து மாறுபட்டிருப்பதாக அந்த நாட்டு அரசு தெரிவித்தது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவி வருகிறது. தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேசியாவிலும் இதன் தாக்கம் அதிகரித்து வருகிறது. அங்கு கொரோனா வைரஸால் சுமார் 12 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். 800 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.



இந்நிலையில் இந்தோனேசியாவில் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் மற்ற உலக நாடுகளில் பரவி வரும் வைரஸிடமிருந்து மாறுபட்டிருப்பதாக அந்நாட்டு அரசு தகவல் வெளியிட்டது. அங்கு பரவி வரும் கொரோனா வைரஸின் மரபணுக்களை ஆய்வு செய்ததில் இது தெரியவந்தது.

இது தொடர்பாக அந்நாட்டு ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பாம்பங் பிராட்ஜாங் கொரோ தெரிவிக்கையில், "ஆய்வுகளின் அடிப்படையில் இதுவரை 3 விதமாக கொரோனா வைரஸ் உருமாறியிருப்பது கண்டறியப்பட்டது.

ஆனால், இந்தோனேசியாவிலிருந்து ஆய்வுக்கு அனுப்பப்பட்ட வைரஸின் மாதிரிகள் இதுவரை கண்டறியப்படாத வகைகளில் ஒன்றாகும். எனினும் இவை வைரஸின் உருமாற்றம் மற்றும் தடுப்பூசி குறித்து ஆய்வு செய்து வரும் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவிகரமாக அமையும்" என்றார்.

இந்தோனேசிய தீவுக்கூட்டங்களில் பரவி வரும் கொரோனா வைரஸின் மாதிரிகள் ஜேர்மனியிலுள்ள ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

# நுண்கடன் மீள செலுத்தும் காலத்தை நிறுவனங்கள் ஒத்திவைக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

கடன்களை மீள வசூலிப்போர் அக்கடன்களை மீளச் செலுத்தும் காலத்தை இயல்புநிலை திரும்பும்வரை மனிதாபிமான அடிப்படையில் ஒத்திவைக்க வேண்டும் என கடற்றொழில் மற்றும் நீரியல் வழ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளதுடன் இது தொடர்பில் மீண்டும் அமைச்சரவையின் கவனத்திற்கும் கொண்டு செல்லவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நுண்கடன் வழங்கிய நிறுவனங்கள் தமது கடன்களை மீள் வசூலிக்கும் சந்தர்ப்பத்தில் மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாவது மட்டுமல்லாது அவமரியாதைகளுக்கும் உள்ளாவதாக அறியமுடிகின்றது.

இந்நிலையில் நுண்கடன் நிறுவனங்களில் கடன்களை பெற்ற அதிகமான மக்கள் தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக தங்களால் உடனடியாக அக்கடனை திரும்ப செலுத்த முடியாதுள்ளதுடன் தமக்கு மனிதாபிமான அடிப்படையில் காலம் தாழ்த்தி கடனை மீளச் செலுத்துவதற்கான சலுகையை தருமாறு கோருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவலை தடுக்கும் நோக்குடன் சுகாதார துறையினரது ஆலோசனைக்கு அமைய சமூக இடைவெளியை பேணுவதற்காக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் அரச ஊழியர்கள் முதல்கொண்டு நாளாந்தம் கூலி வேலை செய்து தமது குடும்ப வருமானத்தை பெறும் அனைவரும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். குறிப்பாக சிறு கடைகள் மற்றும் நாளாந்தம் தொழில் செய்து தமது குடும்ப வாழ்வை மேற்கொண்டுவந்த குடும்பங்கள் பல துயரங்களை நாளாந்தம் சந்தித்து வருகின்றனர்.

இத்தகைய மக்களே அதிகளவில் தமது குடும்ப தேவை கருதி பல நுண்கடன் நிறுவனங்களில் கடன்களைப் பெற்றுள்ளனர். நாட்டின் முடக்க நிலையை அடுத்து அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பல்வேறு சலுகைகளை வழங்குவதற்கான சுற்றறிக்கைகள் விடுக்கப்பட்டு மக்களின் அசௌகரியங்களை குறைப்பதற்கான வழிவகைகளை மேற்கொண்டார்.

இதில் அரச மற்றும தனியார் வங்கிக் கடன்களை பெற்ற மக்களுக்கும் சலுகைகளை வழங்குமாறு சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இந்நிலையில் குறித்த மக்களது நிலைமைகளை கருத்திற்கொண்டு ஒரு மனிதாபிமான மான அடிப்படையில் இயல்புநிலை திரும்பும்வரை காலம் தாழ்த்தி அக்கடன்களை மீளச் செலுத்துவதற்கான சந்தர்ப்பத்தை குறித்த நிறுவனங்கள் அம்மக்களுக்கு வழங்கி அவர்கள் தற்போது எதிர்கொள்ளும் இடர்பாடுகளை ஓரளவேனும் குறைப்பதற்கு வழிவகை செய்வது அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-4-114)

# நாடளாவிய ரீதியில் நாளை திங்கட்கிழமை முதல் 1,500 இ.போ.ச. பேருந்துகள் மேலதிக சேவையில்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நாளை திங்கட்கிழமை முதல் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 1500 பேருந்துகள் மேலதிகமாக சேவையில் இணைக்கப்படும் என இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்தது.

நாளை திங்கட்கிழமை முதல் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் மீண்டும் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. அதனால் அலுவலக நேரங்களில் பணியிடங்களுக்கு வரும் ஊழியர்கள் நலன் கருதியே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தற்போது பேருந்துகள் மாவட்ட எல்லைக்குள் மட்டுமே இயக்கப்படுகின்றன.

எவ்வாறெனினும் மாவட்டங்களுக்கிடையில் போக்குவரத்து நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் அனுமதி வழங்கினால் அதற்கேற்ப பேருந்து பயணங்கள் தொடங்கப்படும் என்றும் இலங்கை போக்குவரத்து சபை சுட்டிக்காட்டியது.

இதேவேளை மேலும் ஏதேனும் நிறுவனங்கள் கோரினால் ஒரு குறிப்பிட்ட கட்டணத்திற்கிணங்க ஊழியர்களை கொண்டு செல்ல பேருந்துகளை வழங்கவும் இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்தது

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 426 பேருந்துகள் தற்போது நாடு முழுவதும் மருத்துவ ஊழியர்களின் நலன் கருதி சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்நிலையில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டாலும் உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக மட்டுமே பேருந்துகளைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது என்றும் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார். (இ)

# இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர்

# கோபால் பாக்லே கடமையை ஆரம்பித்தார்



(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக நியமனம் பெற்ற கோபால் பாக்லே கொழும்பில் பணிகளை ஆரம்பித்தார். கடந்த வெள்ளிக்கிழமை பெரும் தொகை மருத்துவப் பொருட்களுடன் இலங்கையை வந்தடைந்த அவர் , நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வைரஸ் அச்சுறுத்தல் நிலைமையைக் கருத்தில் கொண்டு இரு வாரத்திற்குள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேரடியாகச் சந்திக்கவுள்ளார்.

இலங்கைக்கான முன்னாள் உயர்ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்துவை அமெரிக்காவுக்கான தூதுவராக இந்திய அரசு நியமித்தது. இதனைத் தொடர்ந்தே கோபால் பாக்லேவை கொழும்பிற்கு அனுப்பி வைக்க டில்லி நடவடிக்கை எடுத்தது.

1992 ஆம் ஆண்டு இந்திய வெளியுறவு சேவையின் அதிகாரியான பாக்லே இலங்கைக்கான நியமனத்திற்கு முன்பு பிரதமர் அலுவலக இணைச் செயலாளராகப் பணியாற்றினார். இதற்கு முன்பு வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் உள்ளிட்ட பல முக்கிய பதவிகளையும் கோபால் பாக்லே வகித்துள்ளார்.

மேலும் பாகிஸ்தானுக்கான இந்தியத் துணைத் தூதுவராகவும் அவர் பணியாற்றினார். வெளியுறவு அமைச்சகத்திலுள்ள பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் விவகார பிரிவிலும் பணியாற்றினார்.

கொவிட்-19 உலக வைரஸ் தாக்கத்தின் பின்னர் தெற்காசிய பிராந்தியத்தில் ஏற்படக் கூடிய பொருளாதார மற்றும் பிராந்திய அரசியலைக் கையாளும் வகையில் டில்லி கூடிய அவதானம் செலுத்தியுள்ள நிலையில் கோபால் பாக்லே இலங்கையில் பணிகளை ஆரம்பித்துள்ளார்.

இந்திய வெளியுறவு சேவையின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவராக இவர் அடுத்து வரும் மூன்று ஆண்டு காலம் வரையில் இலங்கையில் பணிபுரியவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இராசிபலன்

10.05.2020
சித்திரை 27, ஞாயிற்றுக்கிழமை
திருதியை பிற்பகல் 12.03 மணிவரை
கேட்டை முற்பகல் 8.40 மணிவரை
சுபநேரம்- 8.54 - 10.24 மணிவரை
இராகுகாலம்- 4.24 - 5.54 மணிவரை
சந்திராஷ்டமம் - கார்த்திகை
சங்கடகர சதுர்த்தி விரதம்



**மேஷம்**
அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக்க முற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆன்றோர்களின் சந்திப்புண்டு.



**ரிஷபம்**
குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.



**மிதுனம்**
நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.



**கடகம்**
பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.



**சிம்மம்**
பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், பிரபலமானவர்கள் சந்திப்பு இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.



**கன்னி**
குடும்பத்தில் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முற்படுவர், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், கொள்ளைப்பிடிப்போடு செயற்படும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.



**துலாம்**
நீண்ட நாளைய விருப்பொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



**விருச்சிகம்**
நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருங்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அனைத்திலும் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள்.



**தனுசு**
சோம்பலை விலக்குவது நல்லது, சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.



**மகரம்**
வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, அலைச்சல்கள் சற்று கூடும்.



**கும்பம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.



**மீனம்**
மற்றவர்களின் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழில் வளர்க்க கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தூரதேசத்திலிருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம்.

நேர்மையற்ற அமைதியினும் நேர்மையான போர் மேலானது.